

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அவர்களின் 11ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதி ராமேஸ்வரம் பேய்க்கரும்பில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கே.கதிரவன், ராமேஸ்வரம் நகர் மன்றத் தலைவர் நாசர்கான், துணைத்தலைவர் தட்சிணாமூர்த்தி உட்பட கட்சி நிர்வாகிகள் மற்றும் நகர் கழக, ஒன்றியக் கழக நிர்வாகிகள், மக்கள் பிரதிநிதிகள், குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

### இளைஞர்களுக்கு அதிக வேலைவாய்ப்பை உருவாக்க ஒன்றிய அரசின் நடவடிக்கை என்ன?

# திறன் மேம்பாட்டுத் திட்டங்களின் செயல்பாடுகள் எந்த நிலையில் உள்ளன?

## மாநிலங்களவையில் – கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கேள்வி!



புதுடெல்லி, ஜூலை.28-

டெல்லி பாராளுமன்ற மாநிலங்களவை கூட்டத் தொடரில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டார்.

அப்போது, திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டங்கள் வலுப்படுத்தப்பட் டுள்ளனவா? அவற்றின் விவரங்கள் என்ன, இளைஞர்களின் பங்கேற்பு அதிகரித்துள்ளதா, அதனால் கிடைத்துள்ள பயன்கள் என்ன? என மாநிலங்களவையில் மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்து பேசிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை இணையமைச்சர் ஷோபா கரந்த்லாஜே, வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்துவதுடன் வேலைவாய்ப்பை உருவாக்குவதும் ஒன்றிய அரசின் முன்னுரிமையாக உள்ளது. அதற்கேற்ப, நாடு முழுவதும் பல்வேறு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளின் முழு விவரங்களையும் https://dge.gov.in/schemes_programmes என்ற இணையதளத்தில் காணலாம்.

பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா (PMKVY), ஜன் சிக்ஷன் சன்ஸ்தான் (JSS), தேசிய தொழிற்பயிற்சி ஊக்குவிப்புத் திட்டம் (NAPS), தொழிற் கல்வி நிலையங்கள் (ITI) மூலம் செயல்படுத்தப்படும் கைவினைஞர் பயிற்சித் திட்டம் (CTS) உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ், திறன் மேம்பாட்டு மையங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களின் பரந்த வலைப்பின்னல் வாயிலாக திறன் பயிற்சி, மறுதிறன் பயிற்சி மற்றும் மேம்பட்ட திறன் பயிற்சிகளை வழங்கும் வகையில் 'ஸ்கில் இந்தியா மிஷன்' (SIM) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தொழில்துறைக்குத் தேவையான திறன்களுடன் இந்திய இளைஞர்களை எதிர்காலத்திற்குத் தயார்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், உற்பத்தித் துறைக்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து, அனைத்துத் துறைகளிலும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தை ஆதரிக்கவும், வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்தவும், சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் 'பிரதான் மந்திரி விக்சித் பாரத் ரோஜ்கார் யோஜனா' என்ற வேலைவாய்ப்பு சார்ந்த ஊக்கத்தொகைத் திட்டம் (ELI) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ரூ.99,446 கோடி மதிப்பிலான இத்திட்டத்தின் மூலம், இரண்டு ஆண்டுகளில் 3.5 கோடிக்கும் அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்க ஊக்குவிப்பது இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் தேசிய பணிச் சேவை (National Career Service NCS) இணையதளத்தையும் நிர்வகித்து வருகிறது.

இந்த டிஜிட்டல் தளம் மூலம் தனியார் மற்றும் அரசுத் துறை வேலைவாய்ப்புத் தகவல்கள், இணையவழி மற்றும் நேரடி வேலைவாய்ப்பு முகாம்கள், வேலை தேடுதல் மற்றும் பொருத்தமான வேலைவாய்ப்பைக் கண்டறிதல், தொழில்சார் ஆலோசனை, தொழிற்கல்வி வழிகாட்டுதல், திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மற்றும் திறன் பயிற்சித் திட்டங்கள் உள்ளிட்ட ஒருங்கிணைந்த சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வேலைவாய்ப்பு மற்றும் வேலையின்மை தொடர்பான அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்கள், 201718 முதல் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (MoSPI) நடத்தி வரும் கால முறை தொழிலாளர் படை ஆய்வு (PLFS) மூலம் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

அந்த ஆய்வின் சமீபத்திய அறிக்கையின்படி, 15 முதல் 29 வயதுக்குட்பட்ட இளைஞர்களின் தொழிலாளர் படை பங்கேற்பு விகிதம் (LFPR) 2022 ஆம் ஆண்டில் 43.2 சதவீதமாக இருந்தது; அது 2025ஆம் ஆண்டில் 46.0 சதவீதமாக உயர்ந்துள்ளது.

அதேபோல், 15 முதல் 29 வயதுக்குட்பட்ட இளைஞர்களின் தொழிலாளர்-மக்கள் தொகை விகிதம் (WPR) 2022ஆம் ஆண்டில் 38.5 சதவீதமாக இருந்த நிலையில், 2025ஆம் ஆண்டில் 41.4 சதவீதமாக அதிகரித்துள்ளது. மேலும், நாட்டின் வேலையின்மை விகிதம் (UR) 2022ஆம் ஆண்டில் 10.6 சதவீதமாக இருந்த நிலையில், 2025ஆம் ஆண்டில் 9.9 சதவீதமாகக் குறைந்துள்ள தாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### பொள்ளாச்சி நா.மகாலிங்கம் மகள் – பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் துணைவியார்

# திருமதி கருணாம்பாள் வானவராயர் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல் செய்தி!

சென்னை, ஜூலை 28-

அருட்செல்வர் டாக்டர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்களின் மகள் மறைவுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

புகழ்பெற்ற தொழிலதிபர், கல்வியாளர் மற்றும் காந்தியவாதியுமான அருட்செல்வர் டாக்டர் பொள்ளாச்சி நா. மகாலிங்கம் அவர்களின் மகளும் - சன்மார்க்க சபையின் தலைவரும் கல்வித் தந்தையுமான டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்களின் துணைவியாருமான திருமதி கருணாம்பாள் வானவராயர் அவர்கள் மறைவெய்திய செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.

அவரை இழந்து வாடும் கல்வித் தந்தை டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்களுக்கும் அவரது குடும்பத்தார்க்கும், உற்றார் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழகத் தலைவர் அவர்கள் மேற்கண்ட இரங்கல் செய்தி வெளியிட்டதோடு, கல்வித் தந்தை டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்களை அலைபேசியில் தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# நெல்லை வே.ஆழ்வார்

### ஜூலை 28 (2008)



தனது இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

தொடர்ந்து பத்து ஆண்டுகளாக திருநெல்வேலி நகரச் செயலாளராகவும், கழகத்திற்கு சோதனை ஏற்பட்டபோது நகர பொறுப்பாளராகவும், பின்னர் பொதுக்குழு உறுப்பினராகவும் கழகத்தில் பொறுப்பு வகித்தவர்.

திருநெல்வேலி நகர்மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் நடத்திய பல போராட்டங்களிலும் பங்கேற்றதோடு மட்டுமல்லாமல் குறிப்பாக, மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### முதலமைச்சரின் அறை மாற்றமும், அமைச்சர்களின் அண்டப் புளுகுகளும்:

# "கண்ணாடிய திருப்பினா ஆட்டோ எப்படி ஓடும் ஜீவா?"

"சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள முதல்வரின் அறை காற்றோட்டமாக இல்லை, குளிர் சாதனத்தின் உதவியுடன் தான் அறைகள் குளிர்விக்கப்படுகின்றன. தற்போதைய முதல்வர் விஜய், காற்றோட்டமான அறையை விரும்புகிறார். கார்ப்பரேட் அலுவலகம் போல, இயற்கைச் சூழலை ரசிக்கும்படி, தனது அறை கண்ணாடி மாளிகை போல இருக்க வேண்டும் என்று நினைக்கிறார். மேலும், தற்போதுள்ள அறையின் வாஸ்து, முதல்வருக்கு சாதகமாக இல்லை. இதனால், கோட்டை பாரம்பரிய கட்டடத்தில் இருந்து, நாமக்கல் கவிஞர் மாளிகையில் உள்ள, 10வது மாடிக்கு, முதல்வர் அலுவலகம் மாற்றப்பட உள்ளது. இந்த மாடியில் இருந்து பார்த்தால், சென்னை துறைமுகம் மற்றும் கடற்கரை அழகை ரசிக்க முடியும்."

**இது முதல்வரின் அறை மாற்றம் தொடர்பாக தினமலர் நாளிதழ் வெளியிட்டிருக்கும் செய்தி.** 'உங்கள் ஒவ்வொரு வீட்டிலும் விஜய் இருக்கிறேன்' என்று பரப்புரை செய்து ஆட்சியை பிடித்த விஜய்யின் ஆட்சியில் ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும் விஜய்களும் விஜிகளும் பல மணிநேர மின்வெட்டால் தத்தளித்து இரவு பகலாய் புளுங்கிக் கொண்டிருக்கும்போது முதலமைச்சருக்கு ஏ.சி. அறை பிடிக்கவில்லையாம். கடலைப் பார்த்து ரசிக்கும் கண்ணாடி கார்ப்பரேட் அறை வேண்டுமாம். அதோடு உடனடியாக.

**அந்தச் செய்தி தொடர்கிறது:**

"இப்பணியை முடிக்க, பொதுப்பணித் துறை வாயிலாக, ஆறு மாதங்கள் வரை அவகாசம் கேட்கப்பட்டது. அந்தக் கோரிக்கையை அரசு நிராகரித்துவிட்டது. பணியை மூன்று மாதங்களுக்குள் முடிக்க, பொதுத்துறை செயலர் சுந்தரவல்லி தலைமையில் குழு அமைக்கப்பட்டு உள்ளது. இதில், தனியார் கட்டட வடிவமைப்பாளர்கள், ஜோதிடர்கள், வாஸ்து நிபுணர்கள், பாதுகாப்பு தொடர்பான வல்லுநர்கள் உள்ளிட்டோர் இடம் பெற்றுள்ளனர்."

முதல்வரின் ஆஸ்தான ஜோதிடருக்கு அரசுப்பதவி வழங்கும் முயற்சி கடும் எதிர்ப்பினால் கைவிடப்பட்டாலும் அவரது அரண்மனைப் பணி செவ்வனே தொடர்கிறது என்பதுதான் மேற்படி செய்தியின் சாரம்.

**முதலமைச்சரின் அறை மாற்றத்தால் குதிரைபேர குற்றச்சாட்டுகள், சட்டம் ஒழுங்கு பிரச்சினை, பழனியாண்டவர் கோயில் 100 கோடி ரூபாய் நில விற்பனை, மேக தாட்டு விவகாரம், கூட்டணிக் கட்சிகளின் குடைச்சல்கள் என எல்லாவற்றையும் தீர்த்துவிடலாம் என நம்புகிறார்கள் போலும். அதற்காகத்தான் இந்த அவசரம்.** இதை வெட்டிச் செலவு என அவர்கள் கூட்டணிக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரே கண்டித்தாலும் வாஸ்து நிபுணர்கள் குறித்த நேரத்தில் இந்தப் பணியை முடிக்கவேண்டும் என மும்முரமாக இருக்கிறார்கள் போலும். 'இந்த ஆட்சி ஆறுமாதம்கூட தாங்காது' என வரும் விமர்சனங்களைக் கண்டு பயந்து இந்த அறை மாற்றத்தால் அதை தடுத்து நிறுத்தலாம் என ஆலோசனை சொல்லப்பட்டிருக்கலாம். அம்மையார் ஜெயலலிதாவின் ஆட்சியை ஜோதிடர்கள் எங்குபோய் நிறுத்தினார்கள் என்பது அனைவரும் அறிந்ததே. **முதலமைச்சருக்கு நாம் சொல்ல விரும்புவது இதுதான் " உங்கள் ஆட்சி இரண்டு மாதத்தில் அம்பலமாகி எல்லா முனைகளிலும் தோல்வியடைந்து கொண்டிருக்கிறது. கண்ணாடியைத் திருப்பினால் ஆட்டோ எப்படி ஓடும் ஜீவா?"**



**மனுஷ்ய புத்திரன்,**
**மாநில ஆலோசகர்,**
**தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி**

**நித்தம் நித்தம் நிர்மல் குமாரின் பொய்கள்**

அமைச்சர் நிர்மல்குமாருக்கும் பொய் சொல்வது ஒரு 'அடிக்ஷன்'. அன்றாடம் தி.மு.க.வுக்கு எதிராக நான்கு பொய்களாவது சொல்லாவிட்டால் தொண்டையில் சோறு தண்ணீர் இறங்காது. 'நீட்'டிற்கு எதிரான மாணவர் போராட்டத்தில் தி.மு.க.வின் பங்களிப்புக் குறித்து அப்படி ஒரு அவதூறான பச்சைப் பொய்யை அவிழ்த்துவிட்டுள்ளார். " 'நீட்' தொடர்பான மாணவர் போராட்டங்களில், தேவையற்ற அரசியலை தி.மு.க., செய்கிறது. சிலருக்கு பணம் கொடுத்து, தி.மு.க., 'டீஷர்ட்' அணிவித்து, போராட்டத்தில் அமர வைத்துள்ளனர். இளைஞர்களை, தி.மு.க. தலைவர் ஸ்டாலினும், எதிர்க்கட்சி தலைவர் உதயநிதியும் தவறாக வழி நடத்துகின்றனர். மாணவர்களின் உணர்வுப்பூர்வமான போராட்டங்களை அரசியல் ஆதாயத்திற்கு பயன்படுத்தக் கூடாது." என்கிறார் நிர்மல் குமார்.

இதை யார் சொல்கிறார்கள் என்றால் இளைய தலைமுறையினரின் ஒரு பிரிவினருக்கு சினிமா வெறியூட்டி அவர்களை பொய்களின் மூலமாக திசை திருப்பி ஆட்சிக்கு வந்தது மட்டுமல்ல, 'நீட்'டிற்கு எதிராக போராடும் மாணவர்களை காவல்துறையை ஏவி கைது செய்து, அவர்கள் போராட வந்துவிடக்கூடாது என மெரீனா கடற்கரையை மூடி அனைத்து அடக்குமுறையையும் மேற்கொண்ட த.வெ.க. அரசின் பிரதிநிதி சொல்கிறார்.

தி.மு.க. திசை திருப்புகிறதாம். மாணவர்கள் 'நீட்' ஒழிப்பிற்காக கடும் போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கும்போது, அந்தக் காணொளிகள் நீட்டிற்கு எதிராக மக்கள் உணர்வுகளைத் தட்டி எழுப்பிக்கொண்டிருக்கும்போது 'ஜனநாயகன்' படத்தை வெளியிட்டு இளைஞர்களில் ஒரு பகுதியினர் திரையரங்குகளில் குத்தாட்டம் போடும் காணொளிகளை சமூக வலைதளங்களில் பரப்பி திசை திருப்பியவர்கள் இவர்களின் விர்ஷுவல் வாரியர்ஸ். அது மட்டுமா? **போராட்டம் நடந்துகொண்டிருக்கும் பாலன் இல்லத்திற்கு ஒரு துணைநடிகையை அனுப்பி 'நான் ஜனநாயகன் முதல் காட்சி பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். போராடுகிற நீங்கள் எல்லாம் மாணவர்களே அல்ல" என போராடும் இளைஞர்களை கொச்சைப்படுத்தி அதை ஊடகங்களில் பெரிய செய்தியாக்கியதும் யாரென்று எல்லோருக்கும் தெரியும்.**

எல்லாக் கட்சியைச் சேர்ந்த இளைஞர்களும்தான் பாலன் இல்ல போராட்ட களத்திற்கு வந்திருந்தனர். ஒன்றுபட்டு ஒரு மனதாக போராட்டத்திற்கு உறுதுணையாக இருந்தனர். தி.மு.க.விலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி, முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எழிலன், நான் உட்பட பலரும் சென்று அங்கு போராட்டத்திற்கு ஆதரவாக உரையாற்றினோம். பல்வேறு கட்சிகள், அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் போலவே தி.மு.க. மாணவர் அணியினரும் அங்கு களத்தில் இருந்தனர்.

இந்தப் போராட்டம் தொடங்கிய நாளிலிருந்தே தி.மு.க. தலைவரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினும் மாணவர் போராட்டத்திற்கு தங்கள் உறுதியாக ஆதரவை தொடர்ந்து வழங்கினர். டெல்லியில் காவல்துறை அடக்குமுறையை கடுமையாக கண்டித்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி ஜந்தர் மந்தரில் போராட்டக் காரர்களை நேரில் சந்தித்து போராட்டத்திற்கு தங்கள் ஆதரவை உறுதியாக வழங்கினார். நாடளுமன்றத்தில் மாணவர் போராட்டம் மற்றும் 'நீட்' ஒழிப்பு தொடர்பாக தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர் போராட்டங்களை நடத்தினர். நாடாளுமன்ற வாயிலிலும் அந்தப் போராட்டங்கள் தி.மு.க.வால் முன்னெடுக்கப்பட்டன. நாடாளுமன்றத்தில் ' நீட்' ஒழிப்பு குறித்து விவாதிக்க கோரி வருகிறது.

**' நீட்' குறித்து பேச இந்தியாவில் எந்தக் கட்சிக்காவது முழுத் தகுதி இருக்கிறதென்றால் அது தி.மு.க. மட்டும்தான். 'நீட்' அறிமுகப்படுத்தப்பட்ட நாளிலிருந்து அதன் அபாயங்களைச் சுட்டிக் காட்டி கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக மக்கள் மன்றத்திலும் சட்ட மன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் நீதி மன்றத்திலும் இடையறாத போராட்டங்களை தி.மு.க. நடத்தி வந்திருக்கிறது. உண்மையில் ' நீட் ' எதிர்ப்பு போராட்டம் என்பது தி.மு.க.வின் போராட்டம். கரப்பான் பூச்சிக் கட்சியினரின் போராட்டம் 'நீட்'டை முறையாக நடத்துவது என்ற குறைந்தபட்ச செயல்திட்டமே என்றாலும் மாணவர் எழுச்சிக்கு பக்க பலமாக நின்றது தி.மு.க. ஆரம்பம்முதல் தி.மு.க.வின் போராட்டம் சமூக நீதிக்கு எதிரான 'நீட்; உள்ளிட்ட அனைத்து நுழைவுத் தேர்வுகளும் ஒழிக்கப்படவேண்டும் என்பதே. இதில் எல்லாம் பேசுவதற்கு நிர்மல் குமார்களுக்கு ஏதேனும் அருகதை இருக்கிறதா? 'மாணவர்களின் செல்லி போராட்ட பற்றி என்ன நினைக்கிறீர்கள்?' என்று ஒரு த.வெ.க அமைச்சரிடம் கேட்டால் 'நம்ம பிரச்சினைகளை முதலில் பார்ப்போம்' என்று சொல்லிவிட்டுப் போகிறார். இதுதான் இவர்களின் அக்கறை, புரிதல்.**

பாலன் இல்லத்தில் ' ஜென்ஸீ தி.மு.க.' லோகோ அணிந்த இளைஞர் ஒருவர் வெளியேற்றப்பட்டது நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டவர் செய்த கண்டிக்கத்தக்க செயல். பாலன் இல்லம் என்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் போராட்டம் நடத்திக்கொண்டு இந்தப் போராட்டத்திற்கு அரசியல் கட்சிகள் வரக்கூடாது என்பது யாரை ஏமாற்றும் செயல்? 'ஜென் ஸீ' தி.மு.க. லோகோ அணிந்த டி ஷர்ட்டுடன் ஒருவர் பார்வையாளராக வந்தால் அது போராட்டத்தை திசை திருப்பும் செயலா? உண்மையில் அன்று வந்து போராட்டக்காரர்களை இழிவுபடுத்திய துணை நடிகை மாணவர்களாலேயே வெளியேற்றப்பட்டதும் அதைச் சமாளித்து சமன் படுத்தவே போராட்டத்திற்கு ஆதரவாக பார்வையாளராக வந்து அமர்ந்திருந்த 'ஜென் ஸீ தி.மு.க.' இளைஞர் அவமானப்படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்ட செயல். போராட்டத்திற்கு வந்தவர்கள் எல்லாம் எந்த கட்சியையும் சேராதவர்கள் என ஏதேனும் சான்று வாங்கிக்கொண்டு அனுமதித்தீர்களா? அரசியல் கட்சிகள் இல்லாத போராட்டங்கள் என்று ஏதேனும் உண்டா? அன்று அந்த 'ஜென் ஸீ தி.மு.க.' டீ ஷர்ட் அணிந்த இளைஞரை வெளியேற்றிய நபர் இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் ஆதரவாளர் என்பது சமூக வலைதளங்களில் வெளிப்பட்டது.

**விஜய் ரசிகையான துணை நடிகையின் போராட்டத்தைக் கலைக்கும் தந்திரத்துக்கு துணை போனதும் போராட்டத்திற்கு ஆதரவளிக்கவந்த தி.மு.க. சார்பு இளைஞரை வெளியேற்றியதும் யாரை குளிர்விக்க என்பது தெரிகிறதா? இந்த அஜெண்டாவின் தொடர்ச்சிதான் நிர்மல் குமாரின் பேட்டி. போராட்டத்திற்கு ஆதரவளித்தது தி.மு.க. அதை திசை திருப்பியது த.வெ.க. ஆதரவாளர்கள்,**

**ஆதவ் அர்ஜூனாவின் அடுத்த பொய்**

த.வெ.க. பித்தலாட்டங்களின் முன் வரிசையில் நிற்பவர் ஆதவ் அர்ஜூனா. மேகதாது அணை விவகாரம் தொடர்பாக முதல்வர் விஜய் கர்நாடகாவிற்கு பேச்சுவார்த்தைக்குச் செல்கிறார் என்ற செய்திக்கு தி.மு.க. தலைவர் ' இது சட்ட ரீதியான போராட்டத்திற்கு கடும் பின்னடைவை ஏற்படுத்தும்' என கடும் கண்டனம் தெரிவித்திருந்தார். இதை சமாளிக்க ஆதவ் அர்ஜூனா சொன்ன பொய் இது. "ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. ஆட்சியின்போது, மேக தாட்டு விவகாரத்தில் சட்ட ரீதியான பின்னடைவுகள் ஏற்பட்டன. கர்நாடகாவின் திட்ட அறிக்கையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், சீராய்வு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன." என்பதுதான் அது.

**உண்மையில் நடந்தது என்ன?**

மேகதாது பகுதியில் சுமார் 9,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அணை அமைக்கும் முயற்சியைக் கர்நாடக அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இதற்காக DPR எனப்படும் திட்ட வரைவு அறிக்கையைத் தயாரித்து, மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தின் ஒப்புதலுக்காகக் கர்நாடகா சமர்ப்பித்திருந்தது. இதற்கு எக்காரணம் கொண்டும் மத்திய அரசு அனுமதி வழங்கக் கூடாது என வலியுறுத்தித் தமிழக அரசும், அதற்கு ஆதரவாகப் புதுச்சேரி மற்றும் கேரள மாநில அரசுகளும் உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தன. மறுபுறம், அணை கட்ட அனுமதி கோரிக்கையோடு கர்நாடகாவும் களம் இறங்கியது. இந்த வழக்குகளை விசாரித்த உச்ச நீதிமன்றத்தின் அப்போதைய நீதிபதி பி.ஆர். கவாய் தலைமையிலான அமர்வு, கடந்த 2025ஆம் ஆண்டு நவம்பர் 13ஆம் தேதி ஒரு முக்கியத் தீர்ப்பை வழங்கியது. அதில், **'மேகதாது திட்ட வரைவு அறிக்கையின் மீது மத்திய அரசு இன்னும் இறுதி முடிவு எடுக்காததால், தமிழக அரசு இப்பொழுதே நீதி மன்றத்தை நாடியிருக்கத் தேவையில்லை. ஏற்கனவே காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி ஒழுங்காற்று குழு ஆகியவை அமைக்கப்பட்டுள்ளதால், இந்த இரு அமைப்புகளின் பரிந்துரையின் அடிப்படையில் மட்டுமே மத்திய நிர்வாகம் முடிவெடுக்க வேண்டும், தன்னிச்சையாக முடிவெடுக்கக் கூடாது'** எனக் கூறி தமிழக அரசின் மனுவை அப்போது தள்ளுபடி செய்தது.

கடந்த 2025 நவம்பர் தீர்ப்பை எதிர்த்து, தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் புதிய சீராய்வு மனுவைத் தாக்கல் செய்தது. இந்த மனுவில் தமிழக அரசுத் தரப்பில் கடந்த 2018ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய காவிரி இறுதித் தீர்ப்பில், மேகதாது அணை திட்டத்திற்கு எந்தவொரு அனுமதியும் வழங்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய தமிழக அரசு, 2025 நவம்பர் 13 உத்தரவு முந்தைய தீர்ப்புகளுக்கு எதிரானது என்பதால், அதை உடனடியாக மறுஆய்வு செய்ய வேண்டும் எனத் தீவிரமாக வாதிட்டது.

கர்நாடகாவின் மேகதாது அணை திட்டத்திற்கு எதிரான தமிழக அரசின் சீராய்வு மனுவை, **"வழக்கை மறுஆய்வு செய்யத் தேவையான புதிய முகாந்திரங்கள் ஏதுமில்லை" என்றும், ஆகியவை காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் தொழில்நுட்பக் குழுக்களின் தீவிர பரிசீலனையில் உள்ளன. பரிசீலனையில் உள்ள விவகாரத்தில் முன்கூட்டியே தலையிட முடியாது என்றும் கூறி உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.**

அதாவது வரப்போகும் அபாயத்தை உணர்ந்து நீதிமன்றத்திற்குச் சென்றது தி.மு.க. அரசு. 'பிரச்சினை இன்னும் முற்றவில்லை, முற்றிய பிறகு வாருங்கள்' என்று சொன்னது உச்ச நீதிமன்றம். மேக தாட்டு விவகாரத்தில் தமிழ்நாடு அரசின் அடிப்படைக் கோரிக்கையை அது நிராகரிக்கவும் இல்லை. எந்தப் பின்னடைவும் ஏற்படவில்லை. தி.மு.க. இந்தப் பிரச்சினையை முன்கூட்டியே நீதிமன்றத்திற்கு ஏன் கொண்டு சென்றது என்பதற்கு இப்போது நடந்துகொண்டிருக்கும் காட்சிகளே சாட்சி. **நீதி மன்றம் தான் இதில் உரிய கவனம் செலுத்தவில்லை. அது எல்லாப் பொறுப்பையும் காவிரி மேலாண்மை ஆணையத்திடம் சுமத்தியது. ஆனால் காவேரி மேலாண்மை ஆணையம் இதில் எந்த விதத்தில் நியாயமாக நடந்துகொள்ளவில்லை.** இதெல்லாம் இந்தப் பிரச்சினை என்னவென்றே தெரியாத ஆதவ் அர்ஜூனாவின் வழக்கமான பொய்கள்.

ஆனால் காவிரி நீருக்காக த.வெ.க. அரசு என்ன இலட்சணத்தில் போராடினார்கள் என்பதற்கு தினமலரில் வந்த இன்னொரு செய்தியை பாருங்கள்.

"காவிரி மேலாண்மை ஆணையத்தின், 53வது கூட்டம், அதன் தலைவர் எஸ்.கே.ஹல்தார் தலைமையில், 23ம் தேதி டில்லியில் நடந்தது. இதில், தமிழகத்தின் சார்பில், நீர்வளத்துறை செயலர் சத்யபிரதா சாஹூ, காவிரி தொழில்நுட்ப குழுத் தலைவர் சுப்பிரமணியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். அப்போது, தமிழகத்திற்கு ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் வழங்க வேண்டிய நீரில், நிலுவையில் உள்ள, 24.8 டி.எம்.சி., நீரை விடுவிக்க வேண்டும் என, கேட்கப்பட்டது. ஆனால், கர்நாடகாவில் மழைப் பொழிவு மற்றும் நீர்வரத்தை ஒரு வாரம் கண்காணிக்கலாம், அதன்பின், மாநிலங்கள் முன்வைக்கும் கருத்துக்கள், நீரியல், வானிலை, சார்ந்த சூழ்நிலைகளை கருத்தில் வைத்து முடிவெடுக்கலாம். காவிரி நீர் முறைப்படுத்தும் குழு கூட்டத்தை கூட்டி, மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய நீரின் அளவை தீர்மானிக்கலாம் என்று ஆணையம் அறிவித்தது.

இதனால், **சட்டப்படி தமிழகத்திற்கு கிடைக்கவேண்டிய நீரை, பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு, தமிழக அதிகாரிகள் எந்த எதிர்ப்பும் தெரிவிக்காதது, சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்திற்கு சட்டப்படி உரிய நீர் கிடைப்பதிலும் சிக்கல் எழுந்துள்ளது.**

காவிரி மேலாண்மை கூட்டத்தில் தமிழகத்தின் உரிமைகளுக்கு எதிரான முடிவுகளுக்கு மௌனமாய் மண்டையை ஆட்டிவிட்டு இங்கு வந்து மேகதாது விவகாரத்தில் தி.மு.க. சரியாக செயல்படவில்லை என வெற்றுச் சவடால்.

பொய் சொல்வது ஒரு போதை. அந்தப் பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டார்கள்.